# நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான, பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். எரே 33 : 3

**அறியாதது – எட்டாதது**

தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு தேடி வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான**

**பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்** –என்று கர்த்தர் சொல்கிறார்.

**பெரிய காரியம் என்றால் என்ன ?**

1. இப்பேர்பட்ட, விலையேறப் பெற்ற ஒரு ஆசீர்வாதம் தேவனிடத்தில் உண்டு என்பதை நீ அறியாதிருந்திருக்க வேண்டும்.
2. இப்பேர்பட்ட ஆசீர்வாதம் உன்னுடைய தகுதிக்கு, கிடைக்காது என நீ நினைத்திருக்க வேண்டும்.

இதுவே பெரிய காரியம் ஆகும். உனக்கு தெரிந்த ஆசீர்வாதங்கள் என்பது பெரிய காரியமல்ல. அத்துடன் நீ பெற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்கிற காரியமும், பெரியகாரியம் அல்ல. பெரிய காரியம் நடக்கும் பொழுது, நீ சொல்லும் வார்த்தை, பெரியகாரியம் அல்ல.

இது என்னால் உண்டானது அல்ல , தேவனுடைய சுத்த கிருபை . . . அல்லேலூயா

தேவனுடைய சுத்த கிருபை . . . அல்லேலூயா என்பதாகும்.

**பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.**

**1. அறியாதது: 1 சாமுவேல் 3:7 சொல்கிறது.**

சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான். கர்த்தருடைய வார்த்தை அவனுக்கும் இன்னும் வெளிப்படவில்லை. சாமுவேல் என்னும் **பிள்ளையாண்டான்** ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்கு **பணிவிடை** செய்து கொண்டிருந்தான். கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது. பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை.

ஒருநாள் ஏலி தன்னுடைய ஸ்தானத்திலே, படுத்துக் கொண்டிருந்தான். அவன் பார்க்கக்கூடாதபடிக்கு, அவனுடைய கண்கள் இருளடைந்திருந்தது. தேவனுடைய பெட்டி இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய விளக்கு அணைந்து போகுமுன்னே சாமுவேலும் படுத்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது **சாமுவேலை கர்த்தர் கூப்பிட்டார்.** அதற்கு அவன் **இதோ இருக்கிறேன்** என்று சொல்லி, ஏலியிடத்தில் ஓடி இதோ இருக்கிறேன. என்னை கூப்பிட்டிரே என்றான். அதற்கு ஏலி, நான் கூப்பிடவில்லை. திரும்பி போய் படுத்துக்கொள் என்றான் . இரண்டாம் முறையும் இதே சம்பவம் நடைபெற்றது. மூன்றாம் முறையும் **சாமுவேலை கர்த்தர் கூப்பிட்டார்.** சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான். ஆனால் கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார் என்று ஏலி அறிந்து, **சாமுவேலை நோக்கி, நீ போய் படுத்துக் கொள். உன்னைக்கூப்பிட்டால் "கர்த்தாவே, சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்."**என்றான். போய் படுத்துக்கொண்டான.

அப்பொழுது கர்த்தர் வந்து நின்று முன்போல, சாமுவேலே, சாமுவேலே என்று கூப்பிட்டார். அதற்கு சாமுவேல் "**சொல்லும் அடியேன் கேட்கிறேன்**"– என்றான்.

**2. எட்டாதது:** கர்த்தர் சாமுவேலை நோக்கி,

"**நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாக சொன்ன யாவையும் அவன்மேல் அந்நாளில் வரப்பண்ணுவேன். அதைத் தொடங்கவும் முடிக்கவும்போகிறேன்.**"என்றார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

நம்முடைய வழக்கம் **தாத்தாவிடம் சொல்லி, பேரனை எச்சரிப்பது** ஆகும்.

ஆனால் தேவனோ பேரனிடம் சொல்லி தாத்தாவை எச்சரிக்கிறார்.

**1 சாமுவேல் 3 : 20 சொல்கிறது.**

சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயர் செபாமட்டடுமுள்ள சகலம இஸ்ரவேலருக்கும் விளங்கினது.

இதே ஆசீர்வாதத்தை இந்த ஆண்டில் உங்களுக்கும் கர்த்தர் கட்டளையிடுவாராக. ஆமென்.

**பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.**